بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *19/04/2024* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

☆ **உஹுது போர் மற்றும் ஹம்ராஅல் அஸது போர் தொடர்பான ஈமானை ஒளிரச் செய்யும் பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை குறிப்புகள்**

☆ **மத்திய கிழக்கில் மோசமடையும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு துஆக்களுக்கான கவனமூட்டல்**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۱ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝۲ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۳ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝۴ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝۵ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝۶ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝۷

உஹுது போர் சம்பவங்களின் தொடர்ச்சியில் சில சம்பவங்கள் எடுத்து வைக்கப்படுகின்றன. இதன் மூலமாக பெருமானார் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கையின் அழகிய அம்சங்களைக் குறித்து இன்னும் தெரிய வருகிறது.

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். அவர்களின் தந்தை ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள் வஃபாத்தான போது அவர்கள் மீது கடன் இருந்தது.

நான் பெருமானார் (ஸல்) அவர்களிடம் சென்று, கடன் கொடுத்தவர்களிடம் அவர்கள் தமது கடனில் கொஞ்சம் குறைத்துக் கொள்ளுமாறு தாங்கள் புரிய வையுங்கள் என்று உதவி கோரினேன். ஆகவே பெருமானார் (ஸல்) அவர்கள் அம்மக்களிடம் இந்த விருப்பத்தை வெளிப்படுத்தினார்கள். ஆனால் கடன் கொடுத்தவர்கள் குறைக்கவில்லை. அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் என்னிடம், நீங்கள் சென்று உங்களுடைய பேரீத்த வகைகளைத் தனித்தனியாகப் பிரித்து வையுங்கள். பிறகு எனக்குத் தகவல் தெரிவியுங்கள் என்றார்கள். ஆகவே நான் அவ்வாறே செய்துவிட்டு பெருமானார் (ஸல்) அவர்களுக்குத் தகவல் அனுப்பி வைத்தேன். பெருமானார் (ஸல்) அவர்கள் வருகை தந்தார்கள். அன்னார் பேரீத்தம் பழக் குவியலின் மீதோ அல்லது அவற்றின் இடையிலோ அமர்ந்து கொண்டார்கள். அந்த மக்களுக்கு நிறுத்துக் கொடுங்கள் என்று என்னிடம் கூறினார்கள். ஆகவே நான் அந்த மக்களுக்கு நிறுத்துக் கொடுத்தேன். எந்த அளவுக்கு என்றால் அவர்களுடைய உரிமையை நான் முழுவதுமாக கொடுத்து விட்டேன். அவ்வாறிருந்தும் என்னுடைய பேரீத்தம் பழங்கள் எஞ்சி விட்டன. அவற்றுள் எந்தக் குறைவும் ஏற்படாதது போன்று தெரிந்தது.

ஹஸ்ரத் சஅது பின் முஆஸ் அவர்களின் வயோதிக மற்றும் பார்வை குறையுள்ள தாயார் பெருமானார் (ஸல்) அவர்களின் மீதுள்ள நேசத்தின் காரணமாக மதீனாவை விட்டு வெளியே வந்திருந்தார்கள். இந்த விபரம் முன்னரும் கடந்த

குத்பாவில் கூறப்பட்டு விட்டது. பெருமானார் (ஸல்) அவர்கள் தமது சவாரியை நிறுத்தச் செய்து அந்த மூதாட்டியிடம் அவர்களின் மகனுடைய ஷஹாதத்துக்காக வருத்தம் தெரிவித்தார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** இந்த சம்பவங்களை சிந்தித்துப் பாருங்கள்! யாருக்கு துன்பம் ஏற்பட்டுள்ளதோ அவருடன் அனுதாபத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்று பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எந்த அளவு அதிகமாக உணர்வு இருந்தது என்று பாருங்கள்! பெருமானார் (ஸல்) அவர்கள் அதற்குப் பிறகு அந்த மூதாட்டியிடம், நீங்களும் மகிழ்ச்சி கொள்ளுங்கள்; யாருடைய உறவினர்கள் போரில் ஷஹீதாகி விட்டார்களோ அந்த அனைத்து சகோதரிகளுக்கும் நற்செய்தி கூறுங்கள்! இன்று ஷஹீதான அனைவரையும் அல்லாஹ் சொர்க்கத்தில் ஒன்று சேர்த்து விட்டான். அவர்கள் அனைவரும் அல்லாஹ்விடம், இறைவா! நாங்கள் பின்னால் விட்டு வந்தவர்களை கவனித்துக் கொள்வாயாக என்று துஆ செய்தார்கள் என்று கூறினார்கள். இதைக் கூறிய பிறகு, 'இறைவா உஹுதுடைய ஷஹீதுகள் பின்னால் விட்டுச் சென்றவர்களை நன்கு கவனிக்கக் கூடியவர்களை உருவாக்குவாயாக' என்று பெருமானார் (ஸல்) அவர்களும் துஆ செய்தார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவுக்குள் நுழைவதற்கு முன்பே உஹுதுடைய ஷஹீதுகள் பின் விட்டுச் சென்ற அம்மக்களுக்கு அன்னார் எவ்வாறு ஆறுதல் வழங்கினார்கள் என்றும், அவர்களுடன் எவ்வாறு அனுதாபத்தை வெளிப்படுத்தினார்கள் என்றும் இதிலிருந்து தெரிய வருகிறது! ஏனென்றால், அன்னார் காயமடைந்திருந்தார்கள். அன்னாருடைய அன்பிற்குரிய உறவினர்கள் ஷஹீதாகி இருந்தார்கள். அன்னாருடைய அன்பிற்குரிய சஹாபிகள் மரணமடைந்திருந்தார்கள். ஆனால் அன்னார் தாம் எடுத்து வைத்த ஒவ்வோர் அடியிலும் மதீனத்து மக்களுக்கு ஆறுதல் வழங்கிக் கொண்டே சென்றார்கள். அன்னாருக்குத் தமது துன்பத்தைப் பற்றி கடுகளவும் உணர்வு இருக்கவில்லை. இந்த அளவு துன்பம் இருக்கும் போது இந்த அளவு துக்கங்களும் முஸீபத்துகளும் இருக்கும் போது, அன்னாரைப் போன்று மற்றவர்களுடன் அனுதாபத்தை வெளிப்படுத்திய எந்த ஒரு நபரையும் நாம் காண முடியாது.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** இந்தப் போரிலும் பெருமானார் (ஸல்) அவர்கள் மேலான துணிவுடனும், உயர்ந்த நல்லொழுக்கத்தின் முன்மாதிரியை நிலைநாட்டியவாறும், மக்களுடன் அனுதாபத்துடனும் ஆறுதலுடனும் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதை நாம் பார்க்க முடிகிறது! அன்னார் ஒழுக்கத்தில் எந்த அளவு மேலான இடத்தில் நிலை பெற்றிருந்தார்கள் என்பதும் இந்தப் போரினுடைய சூழ்நிலைகளில் இருந்து தெரிய வருகிறது.

இந்தப் போரில் ஸஹாபிகளின் நிகரற்ற தியாகங்களும் தெரிய வருகின்றன. போர் முடிந்த பிறகு அன்னார் மதீனாவுக்குத் திரும்பிச் சென்று கொண்டிருந்தார்கள். அன்னார் ஷஹீதாகி விட்டார்கள் என்ற செய்தியைக் கேட்டு மிகவும் நிம்மதி இழந்து போயிருந்த மதீனத்துப் பெண்கள் அன்னாருடைய வருகையைக் கேள்விப்பட்டு அன்னாரை வரவேற்பதற்காக மதீனாவுக்குக் கொஞ்சம் வெளியே வந்து காத்திருந்தார்கள். அவர்களுள் பெருமானார் (ஸல்) அவர்களின் மனைவியினுடைய சகோதரி ஹம்னா பின்த் ஜஹ்ஷ் (ரலி) அவர்களும் இருந்தார்கள். இவர்கள் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களின் மனைவி ஆவார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹம்னா (ரலி) அவர்களிடம், அவர்களுடைய மாமா ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள் என்றும், அவர்களுடைய சகோதரர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் (ரலி) அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள் என்றும் அடுத்தடுத்து கூறினார்கள். இதைக் கேட்டுவிட்டு அவர்கள் இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன் என்று கூறிவிட்டு அவர்களின் அந்தஸ்து உயர்வுக்காக துஆ செய்தார்கள். ஆனால் தம் கணவர் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களின் ஷஹாதத் செய்தியைக் கேட்டபோது, அவர்களுடைய கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது. அந்தோ பரிதாபம் என்று அவர்கள் கூறினார்கள்.

இதைக் கண்ட பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பெண்களுக்குத் தம் கணவருடன் எந்த அளவு ஆழமான தொடர்பு இருக்கின்றது எனப் பாருங்கள்! பெண்கள் இவ்வாறான நேரத்தில் தமது அன்பிற்குரிய உறவினர்கள் மற்றும் இரத்த உறவினர்களை மறந்து விடுவார்கள். ஆனால் அவளை நேசிக்கக் கூடிய கணவர் நினைவில் இருப்பார். அதற்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் ஹம்னா அவர்களிடம், நீங்கள் உங்களுடைய கணவருடைய மரணச் செய்தியைக் கேட்டு விட்டு அந்தோ பரிதாபம் என்று ஏன் கூறினீர்கள் என்று கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனக்கு அவருடைய மகனுடைய நினைவு வந்துவிட்டது; அவரை யார் கவனித்துக் கொள்வார் என்று நினைத்தேன் என்றார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள், உமது கணவரை விடச் சிறந்த முறையில் அவரை கவனித்துக் கொள்ளக்கூடிய நபரை இறைவன் உருவாக்குவானாக என்று நான் அல்லாஹ்விடம் துஆ செய்கிறேன் என்றார்கள்.

ஆகவே இந்த துஆவின் விளைவு எவ்வாறானதாக இருந்தது என்றால், ஹஸ்ரத் ஹம்னா (ரலி) அவர்களின் திருமணம் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களுடன் நடந்தது. அவர்களுக்கு முஹம்மது பின் தல்ஹா என்ற மகன் பிறந்தார். ஆனால் வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது என்னவென்றால், ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஹம்னா (ரலி) அவர்களின் முதல் குழந்தைகளுடன் எந்த அளவு நேசத்துடனும், பரிவுடனும் நடந்து கொண்டார்கள் என்றால் அந்த அளவு தம் மகன் முஹம்மது அவர்களுடன் நடந்து கொள்ளவில்லை! வேறொருவருடைய குழந்தைகளை எந்த அளவு நேசத்துடன் வளர்க்கக்கூடியவராக தல்ஹா அவர்களைக் கண்டோமோ அவ்வாறு வேறு எவரையும் நாங்கள் கண்டதில்லை என்று மக்கள் கூறினார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை இவ்வாறு எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்:** "ஒரு பெண்ணுக்குத் தன்னை நேசிக்கக் கூடிய கணவருடன் எந்த அளவு ஆழமான தொடர்பு இருக்கிறது என்று பாருங்கள்! இதன் மூலமாக அன்னார் கூற வந்த கருத்து என்னவென்றால், ஆண்கள் பெண்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும். சின்னச் சின்ன விஷயங்களுக்காக பெண்களை அடிப்பதிலும் துன்புறுத்துவதிலும் ஈடுபட்டு விடக்கூடாது. அவர்களின் பெண்கள் தம் அன்பர்கள் மற்றும் நெருங்கிய உறவினர்களை விட்டு விட்டு அவர்களிடத்தில் வந்து இருக்கும் போது, அவர்களுக்கு கண்ணியம் வழங்கப்பட வேண்டும் என்பதே நீதியின் எதிர்பார்ப்பாக உள்ளது. அதை விட்டுவிட்டு சின்னச் சின்ன விஷயங்களுக்காக அவர்களுடன் சண்டை, சச்சரவை உருவாக்கக்கூடாது."

அன்னாருடைய ஒவ்வொரு கூற்றிலும் பாடம் உள்ளது. மனிதன் அதை கவனமாகக் கேட்டு சிந்திக்கும்போதுதான் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறிய

அவ்விஷயம் அந்த நபருக்காக கூறப்பட்டது மட்டுமின்றி பொதுவாக அனைவருக்காகவும் ஓர் அறிவுரையாக இருந்தது என்று தெரியவருகிறது!

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவில் நுழைந்தபோது, மதீனாவில் எந்தப் பெண்களுடைய உறவினர்கள் போரில் ஷஹீது ஆகி இருந்தார்களோ அவர்களைப் பற்றிய செய்தி அவர்களுக்குக் கிடைத்து விட்டிருந்தது. அப்பெண்கள் அழ ஆரம்பித்து விட்டார்கள். பெண்கள் அழும் குரலைக் கேட்டபோது முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பம் அன்னாருக்கு நினைவுக்கு வந்தது. அன்னாருடைய கண்களும் கண்ணீரால் நிரம்பி விட்டது. எம் தந்தையின் சகோதரரும், எமது பால்குடி சகோதரருமான ஹம்ஸாவும் ஷஹீதாகி இருக்கிறார்கள்! ஆனால் அவர்களுக்காக துக்கம் அனுசரிக்கக் கூடியவர் யாருமில்லையா என்று அன்னார் கேட்டார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களுடைய உணர்வுகளை நிறைவேற்றக் கூடிய துடிப்பு கொண்டிருந்த சஹாபிகள், அன்னாருடைய ஏதேனும் சிறியதிலும் சிறிய உணர்வைக் கூட நாம் முழுமை செய்யாமல் விட்டுவிடக் கூடாது என்று விரும்பிக் கொண்டிருந்த சஹாபிகள் இதைக் கேட்டபோது அவர்கள் தமது வீட்டை நோக்கி ஓடினார்கள். தம் பெண்களிடம் சென்று, நீங்கள் உங்களுடைய அன்பர்களுக்காக அழுவதை நிறுத்துங்கள்; பெருமானார் (ஸல்) அவர்களின் வீட்டுக்குச் சென்று ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுக்காக துக்கம் அனுசரியுங்கள் என்று கூறினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் களைப்படைந்து வந்திருந்தார்கள்; ஆகவே அன்னார் ஓய்வெடுக்கலானார்கள். இரவின் மூன்றாம் பகுதி கழிந்த போது இஷா தொழுகைக்காக ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் அன்னாரை எழுப்பினார்கள். அன்னார் எழுந்தபோது அந்நேரம்வரை பெண்கள் அன்னாருடைய வீட்டில் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுக்காக ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தார்கள். இங்கு என்ன நடக்கிறது என்று அன்னார் கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! மதீனாவின் பெண்கள் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் வஃபாத்துக்காக அழுது கொண்டிருக்கிறார்கள் என்று கூறப்பட்டது. மதீனாவின் பெண்கள் மீது அல்லாஹ் கருணை காட்டுவானாக! அவர்கள் என்னுடன் அனுதாபத்தை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். அன்சாரிகளுக்கு என் மீது அதிக நேசம் உள்ளது ஏற்கனவே எனக்குத் தெரியும் என்று கூறிவிட்டு, இவ்வாறு ஒப்பாரி வைப்பது அல்லாஹ்விடத்தில் விரும்பத்தகாத விஷயமாக இருக்கிறது என்றும் கூறினார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் மரணத்திற்காக யாரும் அழவில்லையே என்று அன்னார் கூறினார்கள் என்றால் அதுவும் கூட அந்நேரத்தில் ஊக்கப்படுத்த வேண்டும் என்ற உணர்வில்தான் அவ்வாறு கூறினார்கள். அதேபோல் அழக்கூடியவர்களை அன்னார் தடுத்த போதும் அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும் என்ற உணர்வில்தான் அன்னார் அவ்வாறு செய்தார்கள். அன்னார் தடுக்கவும் செய்தார்கள்; அவர்களுக்கு நன்றியும் கூறினார்கள். இப்படிப்பட்ட இக்கட்டான நேரத்தில் அன்னார் நடந்த விதம் எந்த அளவு மகத்துவமிக்கதாகவும், மகிமை வாய்ந்த வழிமுறையாகவும் நமக்குத் தென்படுகிறது!

பெருமானார் (ஸல்) அவர்கள் வீட்டில் நுழைந்த போது தம் மகள் ஃபாத்திமா (ரலி) அவர்களிடம் வாளைக் கொடுத்தவாறு, மகளே! இந்த வாளில் இருக்கக்கூடிய ரத்தத்தை சுத்தம் செய்வீராக. அல்லாஹ்வின் மீது ஆணையாக! இன்று இந்த வாள் உரிமையை செலுத்தியது என்று கூறினார்கள். பிறகு ஹஸ்ரத் அலீ அவர்களும்

ஹஸ்ரத் ஃபாத்திமா அவர்களிடம் தம் வாளை ஒப்படைத்தவாறு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறிய அதே சொற்களைக் கூறினார்கள். இதைக் கேட்டுவிட்டு பெருமானார் (ஸல்) அவர்கள், சில சஹாபிகளின் பெயர்களை எடுத்துக் கூறி அவர்களும் வீரத்தை வெளிப்படுத்தினார்கள் என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இது தொடர்பாக கூறுகிறார்கள்:** **'**சுருக்கம் என்னவென்றால், அன்னாருடைய மருமகன் கூறக்கூடிய விஷயத்தால் மற்ற சஹாபிகளின் உள்ளங்கள் புண்பட்டு விடுவதையும் கூட அன்னாரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.**'**

உஹுது போரின் சம்பவங்கள் இங்கு நிறைவு பெறுகின்றன. இதற்கு பிறகு இன்னொரு போர் நடைபெற்றது அதனுடைய பெயர் ஹம்ராஅல் அஸத் என்பதாகும். இது ஹிஜ்ரீ 3 ஆம் ஆண்டு ஷவ்வால் மாதம் நடை பெற்றது. இந்தப் போர் உண்மையில் உஹுது போரின் ஒரு பங்காகவும், எஞ்சிய பகுதியாகவும் இருந்தது. ஹம்ராஅல் அஸத் போரின் மூலமாக ஏற்பட்ட விளைவுகளின் அடிப்படையில் உஹுது போர் உண்மையான பொருளில் முஸ்லிம்களுடைய வெற்றியாகவே கருதப்படுகிறது.

எவ்வாறு இருப்பினும் இந்த விபரங்கள் இன்ஷா அல்லாஹ் இனிவரும் காலங்களில் எடுத்துக் கூறப்படும்.

அடுத்த விஷயம் என்னவென்றால், பொதுவாக நான் துஆவுக்காக கவனமூட்டி வருவது போன்று, துஆக்களைத் தொடர்ந்து செய்து வாருங்கள். நினைத்தது போன்று, அச்சப்பட்டது போன்று, ஈரான் மீது நேரடியாகவும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது. இது எல்லோருக்கும் தெரியும். இதனால் சூழ்நிலைகள் இன்னும் மோசமாகும். உலகப் போரை இன்னும் மூட்டுவதற்கு முயற்சி செய்கின்ற உலகத் தலைவர்களுக்கும் அல்லாஹ் அறிவை வழங்குவானாக! முஸ்லிம் சமுதாயத்திற்கும் புரிதலையும் அறிவையும் வழங்குவானாக! அவர்கள் ஒன்றாக ஆகி, பிறகு தம்மை எதிர்க்கின்றவர்களை சரியான முறையில் எதிர்க்கக் கூடியவர்களாகவும், நுட்பத்துடன் செயல்படக்கூடியவர்களாகவும் ஆவதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக!

***ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் குத்பாவின் இறுதியில் அமெரிக்காவில் வசித்து வந்த ஜமாஅத்தின் முரப்பி ஆகிய மதிப்பிற்குரிய மவ்லானா குலாம் அஹ்மத் சாஹிப் நசீம் அவர்களைப் பற்றியும், அமெரிக்காவின் முன்னாள் அமீர் ஆகிய மதிப்பிற்குரிய டாக்டர் இஹ்ஸானுல்லாஹ் ஸஃபர் சாஹிப் அவர்களைப் பற்றியும் விரிவான நற்குறிப்பை எடுத்துக் கூறி அவர்களின் புகழத்தக்க பண்புகளைப் பற்றி கூறினார்கள். அத்துடன் அவ்விருவரின் ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைப்பதாக அறிவிப்பும் செய்தார்கள்.***

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّآ اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ یَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**